# உயர்கல்வி அமைச்சின் கல்விக்கூட மதிப்பீடு

கோலாலம்பூர், டிச. 19-
மாணவர்களுக்குத் தகுதிவாய்ந்த கல்வித் திட்டங்களை வழங்குவதில் உயர்கல்விக் கூடங்கள் தொடர்ந்து மேம்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்துள்ளதை 2018 / 2019 தவணைக்கான மலேசிய உயர்கல்விக்கூட மதிப்பீடு சுட்டிக்காட்டுகின்றது.

2015-2025ஆம் ஆண்டுக்கான மலேசிய கல்வி மேம்பாட்டுத் திட்டத்தை வெற்றிபெறச் செய்யும் வகையில் நாட்டின் உயர்கல்வித்துறை சரியான வழியில் பயணிப்பதையும் இந்த முன்னேற்றம் வெளிப்படுத்துகிறது.

இந்த மதிப்பீட்டில் இரு முக்கிய அம்சங்களை உயர்கல்வி அமைச்சு முன்னெடுத்து மதிப்பீடு செய்கின்றது. அவை SETARA மற்றும் MyQUESTஆகும். இந்த செதாரா என்பது மலேசிய உயர்கல்விக்கூட ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பீடாகும்.

அதேசமயம் MyQUEST அம்சம் என்பது தனியார் கல்லூரியின் தரம், மதிப்பீடாகும். இவ்விரு அம்சங்களும் நட்சத்திர அடிப்படையில் 1இலிருந்து 6 வரை மதிப்பீடு வழங்குகிறது.

KEMENTERIAN PENDIDIKAN TINGGI

6 நட்சத்திரங்களைக் கொண்டிருக்கும் ஓர் உயர்கல்விக்கூடம் சிறந்த நிலையில் உள்ளதோடு அனைத்துலக ரீதியில் பிரகாசிக்கின்றது என்று பொருள்படும். அதேபோல் ஒரு நட்சத்திரத்தை மட்டும் கொண்டிருக்கும் உயர்கல்விக்கூடமானது குறைந்தபட்ச தகுதிகளைப் பூர்த்திசெய்யவில்லை என்பதாகும்.

கடந்த 2018/ 2019 தவணையில் 86 உயர்கல்விக்கூடங்கள் செதாரா அம்சத்தின் வழி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அதேசமயம் MyQUEST அம்சத்தின் வாயிலாக 207 தனியார் கல்லூரிகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

அதிலும் குறிப்பாக 8 உயர்கல்விக்கூடங்கள் செதாரா அம்சத்தில் 6 நட்சத்திரங்களைப் பெற்றுள்ளன. அவை மலாயாப் பல்கலைக்கழகம், யுகேஎம் பல்கலைக்கழகம், யுபிஎம் பல்கலைக்கழகம், யுதிஎம் பல்கலைக்கழகம், மலேசிய அறிவியல் பல்கலைக்கழகம், ஐஎம்யு பல்கலைக்கழகம் மற்றும் மலேசிய மோனாஷ் பல்கலைக்கழகமாகும்.

அதனைத் தொடர்ந்து 30 உயர்கல்விக்கூடங்களுக்கு 5 நட்சத்திரங்களும் 30 உயர்கல்விக் கூடங்களுக்கு 4 நட்சத்திரங்களும் 15 உயர் கல்விக்கூடங்களுக்கு 3 நட்சத்திரங்களும் இரண்டு உயர்கல்விக்கூடங்களுக்கு 2 நட்சத்திரங்களும் வழங்கப்பட்ட நிலையில் ஓர் உயர்கல்விக்கூடம் மட்டும் ஒரு நட்சத்திரத்தைப் பெற்றுள்ளது.

இதற்கிடையே, MyQUEST அம்சத்தின் வாயிலாக 14 தனியார் கல்லூரிகளுக்கு 6 நட்சத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுபாங் ஜெயா செகி கல்லூரி, கோத்தா டாமன்சாரா செகி கல்லூரி, சன்வே கல்லூரி (கோலாலம்பூர்), ஆசியா பசிபிக் தகவல் தொழில்நுட்பக் கல்வி மையம், குவாந்தான் மாரா போலிடெக் கல்லூரி, பினாங்கு செகி கல்லூரி, புத்ரா அனைத்துலகக் கல்லூரி, சரவாக் செகி கல்லூரி ஆகியவை அடங்கும்.

இதனைத் தொடர்ந்து இந்த அம்சத்தின் கீழ் 54 கல்லூரிகளுக்கு 5 நட்சத்திரங்களும் 88 கல்லூரிகளுக்கு 4 நட்சத்திரங்களும் 40 கல்லூரிகளுக்கு 3 நட்சத்திரங்களும் 11 கல்லூரிகளுக்கு 3 நட்சத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன என உயர்கல்வி அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் நோராய்னி அமாட் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்த நட்சத்திரத் தகுதிகள் குறித்த தகவல் பெற http://jpt.mohe.gov.my/portal/. என்ற அகப்பக்கத்தை வலம் வரலாம்.

